நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.

நாள். 16.09.2020.

# மன்றக் கூட்ட அறிவிப்பு

2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் நாள். 16.09.2020 சார்வரி வருடம் ஆவணி 31ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்கள் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. **பொருள் :–** இந்நகராட்சி ஆணையாளர் திரு.ர. அசோக்குமார் அவர்களின் ஆகஸ்ட் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 468/2020/சி1)

**தீர்மான எண்:** 930

**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது.

2. **பொருள் :–** இந்நகராட்சி பொறியாளர் திருமதி.ந.சண்முகவடிவு அவர்களின் ஆகஸ்ட் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 573/2020/சி1)

**தீர்மான எண்:** 931

**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது.

3. **பொருள் :–** கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையத்திற்கு 2020–21ம் ஆண்டிற்கான ஆண்டு பங்குத் தொகை ரூ.20,000/– (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 1137/2020/சி1)

**தீர்மான எண்:** 932

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி பழைய மீன் மார்க்கெட் வணிக வளாகத்தில் கடை எண்:12ஐ குத்தகைதாரர் ஒப்படைப்பு செய்ததில் மூலம் மீதமுள்ள வைப்புத்தொகையான ரூ.8570/–ஐ தற்போது நடப்பு ஆண்டில் வைப்புத் தொகை காலங்கடந்த பதிவேட்டின் பகுதி: II ல் பக்கம் எண்:58 மற்றும் வரிசை எண்:155 ( 27.10.15 ) தேதியன்று திரு.செல்வராஜ் என்ற பெயரில் ரூ.8570/–மட்டும் பதிவாகியுள்ளது.மேற்படி வைப்புத்தொகை மூன்று வருடங்களாக மேலாக காலங்கடந்த வைப்புத்தொகையாக இருப்பதால் அன்னார்க்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1491/2011/அ2)

**தீர்மான எண்:** 933

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் பராமரிப்பு பணியினை இந்நகர்மன்றத் தீர்மான எண்.546 நாள்.11.02.2019ல் அனுமதிக்கப்பட்டதன்படி 01.04.2019 முதல் 31.03.2020 வரை ஓராண்டு காலத்திற்கு தனியார் மூலம் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி பகுதியில் மொத்தம் உள்ள 4மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்திடவும் மற்றும் தலைமை குடிநீர் நிலையத்தில் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 2020–2021ம் ஆண்டிற்கும் தனியார் மூலமே ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.855 நாள்.27.03.2020ல் அனுமதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. எனேவ தற்போது வரை பழைய விலை விகிதத்தின் அடிப்படையிலே திரு.ஜி.சுந்தர்ராஜ், ஒப்பந்ததாரர் மூலமே குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்ணயம் செய்யப்பட்டதன்படி, ஒரு மின்பணியாளர் மற்றும் 5 பராமரிப்பு உதவியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், பொதுப்பணித்துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தின் 2020–21 அரசு தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியலின்படி, ரூ.9.90 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் தலைமை குடிநீர் நிலையம், நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பராமரிப்பு பணிகளை ஒரு மின்பணியாளர் மற்றும் 5 பராமரிப்பு உதவியாளர்களைக் கொண்டு தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 298/2020/இ1)

**தீர்மான எண்:** 934

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி தென்கரை கிழக்கு ரதவீதி காந்திசிலை பூங்கா அருகில் உள்ள ஒரு வாவரக்காச்சி மரம் பட்டுப்போய் கீழே விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மரத்தினை முழுமையாக வெட்டி அப்புறப்படுத்த இந்நகராட்சி மூலம் அனுமதி கோரப்பட்டதன்படி, வட்டாட்சியர், பெரியகுளம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2322/2020/அ2 நாள்.14.08.2020ல் மேற்படி மரத்தினை பொது ஏலம் கோரி வெட்டி அப்புறப்படுத்திட மதிப்பீட்டுத் தொகை ரூ.800/– நிர்ணயம் செய்து அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி மரத்தினை ஸ்தலத்திலேயே வெட்டி எடுத்துக் கொள்வதற்கு 24.08.2020ல் பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஏலதாரர்களால் ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.

| வ.எண். | ஏலதாரரின் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1. | திரு. V.செல்லத்துரை,<br>வடக்கு பூந்தோட்டத் தெரு,<br>வடகரை, பெரியகுளம் | ரூ. 1000/– |
| 2. | திரு.பாலா<br>வாகம்புளி தெரு,<br>தென்கரை, பெரியகுளம் | ரூ. 975/– |

மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்த ஏலக் கேள்வி கோரிய உயர்திரு.V.செல்லத்துரை என்பவருக்கு மரத்தினை வெட்டி எடுத்துக் கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி கிழக்கு ரதவீதி அருகில் உள்ள பட்டுப்போன வாவரக்காச்சி மரத்தினை வெட்டி எடுத்துச் செல்ல பொது ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்டவாறு பொது ஏலத்தில் ஒரு வாவரக்காச்சி மரத்தினை ஸ்தலத்திலேயே வெட்டி எடுத்துக் கொள்வதற்கு உயர்ந்த ஏலக் கேள்வி கோரிய உயர்திரு.V.செல்லத்துரை என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 719/2020/இ1)

**தீர்மான எண்: 935**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி பகுதியில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திட்டத்தின் கீழ் 27 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகிறது. மேற்படி சத்துணவு மையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2015–2016ம் ஆண்டு நிதியாண்டில் ஊதியம் வழங்க சத்துணவு பிரிவு கணக்கில் போதிய நிதி நிலை இல்லாத காரணத்தினால் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து 14.12.2015ம் தேதியன்று ரூ.50,000/– முன்பணம் பெறப்பட்டு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

மேலும் சத்துணவு மையங்களில் பணிபுரிந்து வந்த அமைப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் கடந்த 10.02.2016ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் மேற்படி பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களுக்கு உணவு தயார் செய்து வழங்கிட தினக்கூலி அடிப்படையில் அரசு வழிகாட்டுதலின்படி, அமைப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு களுக்கு உணவு தயார் செய்வதற்கு தேவையான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து 11.02.2016ம் தேதியன்று ரூ.60,000/– முன்பணம் பெறப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி செலவினம் மேற்கொள்வதற்கு பெறப்பட்ட மொத்த முன்பணத் தொகை ரூ.1,10,000/–ஐ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு பிரிவு நிதியிலிருந்து இந்நகராட்சி வருவாய் நிதிக்கு காசோலை எண்.762666 நாள்.30.03.2016ன்படி திரும்ப வழங்கப்பட்டு விட்டது. எனவே மேற்படி பெறப்பட்ட முன் பணத் தொகையினை ஈடு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்படி பெறப்பட்ட மொத்த முன்பணத் தொகை ரூ.1,10,000/–ஐ எம்.ஜி.ஆர். சத்துணவு பிரிவு நிதியிலிருந்து இந்நகராட்சி வருவாய் நிதிக்கு செலுத்தப்பட்டதை ஈடு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1139/2020/பி1)

**தீர்மான எண்: 936**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. <u>பொருள்</u> :– இந்நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு திட்டம் துவக்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் துண்டு பிரசுரங்கள் அச்சிடுதல் , பேனர்கள் வைத்தல் பிளக்ஸ் போர்டுகள் வைத்தல் பொதுமக்களின் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்துதல் மற்றும் மாதிரி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்தல் போன்ற பணிகள் செய்வதற்கு திரு.ரா.முத்துகருப்பையா என்பவர் பெயரில் முன்பணமாக ரூ.25,000/– 21.06.2013ல் வழங்கப்பட்டது. மேற்படி தொகைக்கான ரசீதை மற்றும் வவுச்சர்கள் அனைத்தும் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று 09.10.2013ல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (அதன் நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் மேற்படி முன்பணம் இந்நாள்வரை சரிக்கட்டப்படாமல் உள்ளது. எனவே மேற்படி ரசீது நகலினை பரிசீலணை செய்து மேற்படி முன்பணத்தை சரிக்கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்கண்ட முன்பணம் தொடர்பான ஆவணங்களில் உள்ள உண்மைத் தன்மைக்கும், தணிக்கைக்கும் திரு.ரா.முத்துக்கருப்பையா என்பவரை பொறுப்பாக்கி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1133/2020/பி3)

**தீர்மான எண்: 937**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. <u>பொருள்</u> :– நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9310/2019/C1 நாள்.06.03.2020 படி சேலம் மாவட்டம் ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.R.அசோக்குமார் அவர்கள் பெரியகுளம் நகராட்சி ஆணையாளராக நிலை II பணிமாறுதல் செய்யப்பட்டுள்ளார். மேற்படியார் ஓமலூரிலிருந்து பெரியகுளத்தில் பணியேற்பு செய்வதற்கான பணி மாறுதல் பயணப்படி ரூ.11,640/– (ரூபாய் பதினோராயிரத்து அறுநூற்று நாற்பது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 468/2020/சி1)

**தீர்மான எண்: 938**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. <u>பொருள்</u> :–பெரியகுளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிலுள்ள TN60K4844 டிப்பர் லாரிக்கு அனைத்து பழுதுநீக்கப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு 2020ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு கட்டணத்தொகை ரூ.4055/– தேனி மாவட்டம் RTO அலுவலகத்திற்கு திரு.தேவானந்தன் அவர்களால் செலுத்தப்பட்டமையால் அன்னாருக்கு தொகை ரூ.4055/– (ரூபாய் நான்காயிரத்து ஐம்பத்து ஐந்து மட்டும்) தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 02.09.2020ம் தேதிய முன் அனுமதியின் பேரில் திரும்ப வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u> : –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் தொகை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 02.09.2020ம் தேதிய முன் அனுமதியின் பேரில் வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2324/2017/எச்1)**

**தீர்மான எண்: 939**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிலுள்ள TN60AE3066 LCV வானத்தில் ஏர்பில்டர் ஒஸ் பழுதடைந்தமையால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடன் பணிமேற்கொள்ள வேண்டியமையால் NRI Automobile Solutions, Theni நிறுவனம் மூலம் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்மமைக்கு தொகை ரூ.2228/– (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து எட்டு மட்டும்) NRI Automobile Solutions நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u> : –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.731/2019/எச்1)**

**தீர்மான எண்: 940**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்காக பயன்படுத்தப்படும் Mahendra Power Blaster Tractor –ற்கு ஆயில் மாற்றம் செய்ய வேண்டியமையால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி அய்யனார் மோட்டார்ஸ், தேனி நிறுவனம் மூலம் ஆயில் மாற்றம் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மேற்கொண்டமைக்கு தொகை ரூ.3100/– (ரூபாய் மூன்றாயிரத்து நூறு மட்டும் மட்டும்) அய்யனார் மோட்டார்ஸ், தேனி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u> : –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.731/2019/எச்1)**

**தீர்மான எண்: 941**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

13. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிலுள்ள TN60C5592 டம்பர் பிளேசர் லாரியில் PTO பம்ப் செட், திரஸ்ட் பேனட், ஓரிங் கிட் செட், ஸ்ப்ரிங் செட், பிஸ்டன் செட் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டமையால் மேற்படி பழுது நீக்கப்பணிக்கு வழங்கப்பட்ட செலவினம் தொகை ரூ.5500/– (3000+2500) திரு.மாரிமுத்து அவர்களால் வழங்கப்பட்டுள்ளமையால் அத்தொகையினை திரும்ப வழங்க கோரி விலைப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார். எனவே தொகை ரூ.5500/– (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) திரு.மாரிமுத்து அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u> : –**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2260/2018/எச்1)**

**தீர்மான எண்: 942**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் தினசரி நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் மழை காலங்களிலும், வெயில் காலங்களிலும் இந்நகர் பகுதிக்கு தரமான குடிநீர் வழங்க குடிநீரின் தரம் குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனை கூடத்தில் பரிசோதனை செய்து அறிக்கை பெற வேண்டியுள்ளது.

மேலும் அவ்வப்போது பரிசோதனை செய்ய வேண்டியுள்ளதால் இதற்கான உத்தேச செலவினம் ஓராண்டுக்கு ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

**(ந.க.எண். 3587/2012/இ2)**

**தீர்மான எண்: 943**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15. <u>பொருள்</u> **:—** தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2172/2019/ஊ.வ.7, நாள்.26.06.2019ல் தெரிவித்தபடி, பெரியகுளம் நகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக அனைத்து வீடுகளிலும் ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ் தமிழ்நாடு பல்நோக்கு தொழில் கூட்டுறவு சங்கம், திருச்சி நிறுவனம் மூலம் தயார் செய்து வருவாய் உதவியாளர்கள் மூலம் அனைத்து வீடுகளுக்கும் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.90115/— மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஸ்டிக்கர் (10,000 எண்ணம்) | 50740/— |
| 2 | நோட்டீஸ் (5000 எண்ணம்) | 39375/— |
| | மொத்தம் | 90115/— |

<u>அலுவலக குறிப்பு</u> :—

அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1241 /2019/இ2)

**தீர்மான எண்: 944**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ர. அசோக்குமார்
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி